<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கராபுரம்</u>
முன்னிலை:– திரு. S. பாஸ்கரன். M.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கராபுரம்.
2021–ம் ஆண்டு மார்ச் திங்கள் 2–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
<u>நி.ம.எண்.1/2019 இன் அசல் வழக்கு எண் 209/2016</u>

செந்தில் ...மனுதாரர்/வாதி
..எதிர்..
முரளி ...எதிர்மனுதாரர்/எதிர்வாதி

இம்மனு 15.02.2021 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்–வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.சத்தியநாராயணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்ற அழைப்பின்போது அழைத்தும் ஆஜரின்மையினால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்தும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலைனையில் இருந்து வந்த இம்மனுவில் பரிசீலனை செய்து ஆவணங்களின் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரர் தனது பிரமான வாக்குமுலத்தில் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு அசல் வழக்கு எண் 209/2016 வழக்கில் கடந்த 13.03.2017 ம் தேதி எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச தீர்ப்பின் படி மனுதாருகக்கு செலுத்தவேண்டிய தாவா தொகை ரூ.30,634 யையும் பின்வட்டி மற்றும் செலவுத்தொகையும் மனுதாரர்–வாதிக்கு வசூலாகும் பொருட்டு நோட்டிஸ் அ னுப்பியும் தொகையை செலுத்த தவறுகையில் வாரண்டு பிறப்பித்து எதிர்மனுதாரரை சிவில் சிறையில் அடைக்க உத்தரவிடும்படி மனுதாரரால் உவிமுச கட்டளை 21 விதி 37 மற்றும் 38 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்.</u>**

இம்மனுவின் மனுதாரார் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கு எண் 209–2017 ல் இந்நீதிமன்றத்தால் கடந்த 13.03.2017 ம் தேதி எதிர்மனுதாரர் வருகையின்மை காரணமாக எதிர்வாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச தீர்ப்பின் படி மனுதாருக்கு செலுத்தவேண்டிய தாவா தொகை ரூ.30,634 யையும் பின்வட்டி மற்றும் செலவுத்தொகையும் மனுதாரர்–வாதிக்கு வசூலாகும் பொருட்டு நோட்டிஸ் அ னுப்பியும் தொகையை செலுத்த தவறுகையில் வாரண்டு பிறப்பித்து எதிர்மனுதாரரை சிவில் சிறையில் அடைக்க உத்தரவிடும்படி மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

3. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு வாய்தா தேதியில் ஆஜராகாததாலும் அழைத்தும் ஆஜரின்மையினால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் திரு. செந்தில் என்பவர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு

செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

5. தற்போது எழும்வினா இம்மனு அனுமதிக்கத்தக்கதமா? அல்லது இல்லையா என்பதே ஆகும்.

6. அசல் வழக்கானது கடனுறுதிசீட்டு பேரிலான வழக்கு ஆகும். மேற்படி வழக்கில் எதிர்வாதி வருகையின்மை காரணமாக 13.03.2017ம் தேதி இந்நீதிமன்றத்தில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7. இந்த மனுவானது மனுதாரர்–வாதிக்கு எதிர்மனுதாரர்–எதிர்வாதியால் கொடுபடவேண்டிய தாவா தொகை 30,634, பின் வட்டி மற்றும் செலவுத்தொகை வசூலாகும் பொருட்டு நோட்டிஸ் அனுப்பி தொகையை செலுத்த தவறுகையில் வாரண்டு பிறப்பித்து எதிர்மனுதாரரை சிவில் சிறையில் அடைக்க உத்தரவிடும்படி மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

8. மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு பின்பு எதிர்மனுதாரக்கு நீதிமன்ற அறிவிப்பு அனுப்பப்பட்டது. நீதிமன்ற அறிவிப்பை பெற்றுக்கொண்டு எதிர்மனுதாரர் நீதிமன்றத்ததில் ஆஜராகாததால் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது.

9. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன்னுடைய முதன்மை விசாரணை வாக்குமுலத்தை தாக்கல்செய்துள்ளார். அதில் எதிர்மனுதாரருக்கு தாவா கடனை செலுத்துவதற்கான போதுமான வசதி வாய்ப்புகள் எதிர்மனுதாரருக்கு உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி மனுதாரரின் சாட்சியம் ஏற்கும்வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. எதிர்மனுதாரர் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள தொகையான ரூ.30,634/– யை திருப்பி செலுத்த போதுமான வசதி வாய்ப்புடன் இருக்கிறார் என்று நிருபணம் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் 1 மாத காலத்திற்குள் மனுவில் குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்தவேண்டும் என்றும் தவறினால் மனுதொகை வசூலாகும் வரை எதிர்மனுதாரரை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைக்க உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 05.04.2021.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2021ம் ஆண்டு, ஜனவரி திங்கள், 27ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கராபுரம்.

<u>மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சி</u>

ம.சா.1 திரு.செந்தில்

<u>மனுதாரர் தரப்பில் சான்றாவணம் ...இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ..இல்லை</u>

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கராபுரம்.